தமிழ் நாட்டு தாயின் குரல் கேளடா
தமிழ் வீரர் தலைவன் நீ தானடா
இன்னும் மீது நீ கொண்ட தணியாத பாசம்
தமிழீழம் என்பதை அறிவேனடா 2

கனவுகள் சுமந்து
களங்களை வென்றாய்
உரிமைத்தமிழன் நீயடா
கருணை சுரந்த மனங்களை வென்றாய்
மகனே நீயும் தாயடா
தமிழர்கள் உறவுகள் ஈழப் போரில்
உயிராய் நின்று தோள் கொடுக்கும்
தமிழரின் வாழ்வு தலை குனியாது
தமிழ்நாடு என்றும் துணையிருக்கும்
வீர மகனே பிரபாகரனே தமிழ்வாழ்வுக்கு நீதான் விடியலடா 2

தமிழ் நாட்டு தாயின் குரல் கேளடா
தமிழ் வீரர் தலைவன் நீ தானடா

இனையிருள் விலக்க
ஒளியாய் நின்றாய்
ஈழச் சூரியன் நீயடா
இதயங்கள் அணைக்கும்
தலைவன் ஆனாய் மகனேய் விர தீ யடா
விழிகளில் வாழும் கனவுகள் கூட
ஈழத்தின் விடிவை சுமந்திருக்கும்
விடுதலை ஈழம் விரைவினில் சேர
தமிழக உணர்வும் கலந்திருக்கும்
வீர மகனே பிரபாகரனே தமிழ்வாழ்வுக்கு நீதான் விடியலடா 2

இசைத்தட்டு : அண்ணைத்தமிழ்
பதிப்பகம் : அகம்